முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.165/2004**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 16.02.2026 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி Selvi.S.Padmavathi,M.L., அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி.. | 16.02.2026 | சாட்சி.. | பி.வா.சா.1 |
| பெயர்.. | ஸ்ரீராமன் | வயது.. | 75 |
| தந்தை பெயர்.. | ரெங்கநாதன் | கிராமம்.. | புவனகிரி |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ...**

14. புவனகிரி வர்த்த சங்க சொத்து மாசிமக கட்டளையை நடத்தவேண்டும் என்று உள்ளது என்றால் சரியல்ல. மாசிமக கட்டளை 1895 இல் இருந்து புவனகிரி வர்த்த சங்கத்தால் நடத்தபட்டு வருகிறது அதற்கு ஆதாரம் இருக்கிறாதா என்றால் இல்லை அவை திருடு போய்விட்டன. செயலாளர் மணிவண்ணன் தகப்பனார் பெயர் எனக்கு தெரியவில்லை, அவர் புவனகிரி பேருந்துநிலையத்தில் வட்டி கடை வைத்திருக்கிறார். பொருலாளர் ரமேஷ் தகப்பனார் பெயர் ராமலிங்கம், அவர் புவனகிரி அக்ரஹார தெருவில் Furniture business செய்கிறார். துணை செயலாளர் தகப்பனார் பெயர் தெரியாது, அவர் புவனகிரி கடைவீதியில் டீ கடை வைத்து நடத்திவருகிறார். துணை தலைவர் மணிகண்டன் தகப்பனார் பெயர் தெரியாது அவர் புவனகிரி கடைவீதியில் Book stall வைத்திருக்கிறார்.

15. வா.சா.ஆ.1 வரைபடம் சரியானதா என்றால் மண்டபத்திற்கு பின்பு வழி இருக்கிறது (வரைபடத்தில் வழி இல்லைஸ) மற்றபடி சரியாக உள்ளது. புவனகிரி வர்த்தக சங்கம் புவனகிரிக்கு தவைவராக வந்த பிறகு தான் சங்கத்தின் நடவடிக்கைகள் தெரியும் என்றால் சரிதான். 1986 க்கு முன்பு புவனகிரி வர்த்தக சங்கம் புவனகிரிக்கு உறுப்பினராக கூட இல்லை என்றால் சரிதான். வாதி தரப்பு பற்றிய ஆவணங்கள் தெரியுமா என்றால் காட்டினால் தான் சொல்லமுடியும். 12.03.1939 இல் வர்த்த சங்கத்தில் meeting நடந்ததா என்றால் நடந்தது வா.சா.ஆ.2,3,4 சரியானதா என்றால் தயார் செய்யப்பட்டது ஆகும். வா.சா.ஆ.2,3,4 எனது

தகப்பனாரிடம் இருந்த ஆவணம் என்றால் சரிதான். சங்க meeting-க்கு தொடர்ச்சியாக 3 முறை வர தவறினால் அவர்கள் நீக்கபடுவார்கள் என்றால் சரியல்ல. மேற்சொன்னவை பழைய வழக்கில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5, கிரய பத்திரம் சரியான ஆவணம் தான். வா.சா.ஆ.5 ஆவணம் எனது தகப்பனாரிடம் இருந்தது தான். SA.24/1990 இல் வா.சா.ஆ.5 ஆவணம் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

16. 23.09.1973 இல் வா.சா.ஆ.6 General body meeting நடந்தது என்றால் சரிதான். General body meeting வா.சா.ஆ.6 எனது தகப்பனார் வசம் இருந்த ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 General body meeting க்கு எனது தகப்பனார் ரெங்கநாதன் 3 கூட்டத்திற்கு வரவில்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல, தலைமை தாங்கியதாக இருக்கிறது. அந்த meeting இல் கட்டிடம் கட்டுவதற்கு பின்னிட்டு meeting போட்டுக்கொள்ளலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 27.07.1975 meeting நடந்தது. வா.சா.ஆ.7 ஆவணமும் எனது தகப்பனார் வசம் இருந்ததா என்றால் சரியல்ல. 27.07.1975 இல் 3 கூட்டங்களுக்கு எனது தகப்பனார் வராததால் நீக்கப்பட்டுள்ளதாக உள்ளதா என்றால் இந்த தீர்மானத்திலேயே எனது தகப்பனார் கையெழுத்தை வேறு ஒருவர், வேறு ink இல், forgery யாக செய்திருக்கிறார்.

17. இந்த தீர்மான கூட்டத்திற்கு வந்தவர்கள் அனைவரும் கையெழுத்து போட்டுள்ளார்களா என்றால் ஒரு ஒரு கடையாக சென்று கையெழுத்து வாங்கிக்கொண்டார்கள். வா.சா.ஆ.7 தீர்மனாத்தில் 06.07.1975,13.07.1975,20.07.1975 ஆகிய கூட்டங்களுக்கு எனது தகப்பனார் வரவில்லை என்று குறிப்பிடப்பட்டது பற்றி எனக்கு தெரியவில்லை. அதன் பிறகு எனது தகப்பனார் 1975 இல் நீக்கப்பட்டு பிறகு எனது தகப்பனார் தலைவராக 1978 வரை , உயிருடன் இருக்கும் வரை செயல்பட்டார். வா.சா.ஆ.8, 18.12.1975 கூட்டத்தில் புவனகிரி வர்த்த சங்கத்தை பதிவு செய்யப்பட வேண்டும் என்று பேசப்பட்டதா என்றால் சரியல்ல, meeting நடக்கவில்லை. 1975 இல் சட்டநாதமுதலியார், T.T.கலியபெருமாள் தலைவர், செயலாளராக முறையே இருந்தார்கள் என்றால் சரியல்ல. புவனகிரி வர்த்த வங்கம், புவனகிரி பதிவு செய்வதற்கு எனது தகப்பனார் ஏற்பாடு செய்தாரா என்றால் ஏற்பாடு செய்யவில்லை, அதற்கு முன்பு பதிவு செய்யப்படவேண்டும் என்று சட்டம் இல்லை.

18. 18.09.1976 இல், புவனகிரி வர்த்த சங்கம் 29/1976 என்று பதிவு செய்யப்பட்டதா என்றால் பதிவு செய்யப்பட்டது ஆனால் எங்கள் இடத்தில் இல்லை கலியபெருமாள் இடத்திற்கு பதிவு செய்யப்பட்டது ஆகும். வா.சா.ஆ.9, புவனகிரி வர்த்த சங்கம் என்று தான் பதிவாகியுள்ளது என்றால் சரிதான், ஆனால் நடைமுறையில் வர்த்தக சங்கம் புவனகிரி என்று தான் உள்ளது. இடத்திற்கான வீட்டு வரி சங்கத்தில் கட்டினார்களா என்றல் எங்கள் சங்கத்திற்கு நாங்கள் கட்டியிருக்கிறோம், வா.சா.ஆ.9,10 வரி ரசீதுகள் உண்மையானது அல்ல 1079/90 இரு தரப்பையும் வைத்து EO பேசி உண்மையான வர்த்த சங்கம் எங்களுடையது தான் என்று உத்தரவு போட்டார்கள் அதன் பேரில் வாதி தரப்பில் மேல்முறையீடு செய்தார்கள், மேல்முறையீடும் உத்தரவும் எனக்கு சாதகமாக வந்தது.

19. மேற்சொன்ன EO உத்தரவு, மேல்முறையீடு உத்தரவு வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது, EO உத்தரவு 1990 இல் பிறப்பிக்கப்பட்டது. 1975 முதல் 1990 வரை வீட்டு வரி கட்டியதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் பி.சா.ஆ.2 இருக்கிறது. பி.சா.ஆ.2 இல், 1975 இருந்து இருக்கிறதா என்றால் 1990 இல் இருந்து தான் இருக்கிறது, 1956 முதல் 1987 வரை Extract வரி யார் கொடுத்தார்கள் என்பது பற்றி கொடுத்திருக்கிறேன். பி.சா.ஆ.2 வழக்கு முடியும் வரை ஸ்ரீராமனிடமிருந்து வரி வசூலிக்கவேண்டியது என்று இருக்கிறதா என்றால் சரிதான். கதவு எண். 167 B-க்கு குடிநீர் இணைப்பு உள்ளது. அந்த கட்டிடத்திற்கு குடிநீர் இணைப்பு எனது தகப்பனார் தான் வாங்கினார் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்திருக்கிறேன், பி.சா.ஆ.4 167/B க்கு கட்டப்பட்ட கட்டண ரசீது என்றால் பொய்யாக தயாரிக்கப்பட்டது ஆகும். 1985 இல் வரதராஜன் EO வாக இருந்தார் அவர்தான் பி.சா.ஆ.4 இல் கையெழுத்து போட்டிருக்கிறார் என்றால் சரிதான், குடிநீர் இணைப்பு 1966 இல் வாங்கப்பட்டது. 1985 இல் சட்டநாத முதலியார் 167/D யை காதர் பாட்ஷாவிற்கு வாடகைக்கு விட்டாரா என்றால் இல்லை.

20. 167C ஜெகநாதனுக்கு சட்டநாத முதலியார் வாடகைக்கு விட்டாரா என்றால் சட்டநாத முதலியார் விடவில்லை நாங்கள்தான் வாடகைக்கு விட்டோம். வா.சா.ஆ.13,14 ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் forgery ஆனது ஆகும். வா.சா.ஆ.15 படி meeting நடந்ததா இல்லையா என்றால் அந்த general body meeting எங்கள் சங்க இடத்தில் நடக்கவில்லை அதனால் அந்த கூட்டம் நடந்ததா என்பது பற்றி தெரியாது. வா.சா.ஆ.16, OS.15/1985 சார்பு நீதிமன்ற

தீர்ப்பை பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை. எனது தகப்பனார் இறந்த பிறகு OS.15/1985 வழக்கை நான் நடத்தினேன் என்றால் சரிதான். அந்த வழக்கு விசாரணை நீதிமன்றத்தில் தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான். அதன் பேரில் நான் AS.107/1987 நான் கடலூரில் தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.19, 14.03.2003 இல் வர்த்தக சங்க கூட்டம் நடந்ததா என்றால் எங்கள் இடத்தில் நடக்கவில்லை.

21. வா.சா.ஆ.20, 05.06.2003 இல் சங்கத்தை புதுப்பிக்க வேண்டி meeting நடந்ததா என்றால் இல்லை எங்கள் சங்க இடத்தில் நடக்கவில்லை, அவ்வாறு meeting நடக்கவில்லை. வா.சா.ஆ.22, 04.04.2003 இல் கூட்டம், தேர்தலோ நடந்து தேர்தெடுக்கப்பட்டார்களா என்றால் கூட்டமோ, தேர்தலோ நடக்கவில்லை. புவனகிரி வர்த்த சங்கம் 167/C கடைவீதி என்று பதியப்பட்டுள்ளது என்றால் சரிதான். சங்கங்கள் பதிவு செய்யப்பட்டால் ஒவ்வொரு ஆண்டும் Audit செய்யப்பட்டு Report கொடுக்கவேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு வா.சா.ஆ.22, audit report கொடுக்கப்பட்டதா என்றால் சங்க சார் பதிவாளர், சிதம்பரம் சீல் உள்ளது, அது audit report கிடையாது அது வேறு ஆகும். ஆய்வு விவர பட்டியல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது சரிதான்.

22. புவனகிரி வர்த்த சங்கம் 25.09.2003 இல் அறிவிப்பு கொடுத்தார் என்றால் சரிதான். அதற்கு நான் பதில் கொடுக்கவில்லை.04.04.2003 கமலகண்ணன் தலைவர் என்றும், 12.04.2003 சட்டநாதன் தலைவர் என்று 2 தலைவர்கள் பெயர் சொன்னதால் பதிவு அறிவிப்புகொடுக்கவில்லை. அதன் நகல்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன். வா.சா.ஆ.28,29,30 167B,C,D க்கு சொத்து வரி ரசீது கட்டப்பட்டுள்ளது என்றால் அவை பொய்யானவை, 167 B க்கு 124 என புது வரிவிதிப்பு 167C க்கு 122 என புது வரிவிதிப்பு, 167D க்கு என புது வரிவிதிப்பு 118 , 167E க்கு 115 ஆகியவையாகும். வா.சா.ஆ.31,32 வழக்கு சொத்திற்கு உரிய மின் கட்டண ரசீதுகளா என்றால் மொத்தம் 4 சர் வீஸ் உள்ளது 2 சர்வீஸ்க்கு மட்டும் கடைகாரர்களிடம் இருந்து வாங்கி தாக்கல் செய்திருக்கிறார்கள்.

23. வா.சா.ஆ.33,34,35, வாடகை பத்திரப்படி, வா.சா.ஆ.33 கமலகண்ணன் காசிநாதனுக்கு வாடகைக்கு விட்டிருந்தாரா என்றால் 167B க்கு எழுதி கொடுத்தாக சொல்வது உண்மையல்ல. 22.08.2006 கமலகண்ணன் காதர் பாட்ஷாவிற்கு வாடகை பத்திரம் எழுதிக்கொடுத்தாரா என்றால் சரியல்ல, 25.08.2006 இல் கமலகண்ணன்

பாலுவிற்கு வாடகை பத்திரம் எழுதிக்கொடுத்தாரா என்றால் சரியல்ல, மேற்சொன்ன 3 ஆவணங்களான வா.சா.ஆ.33,34,35 பொய்யானவை தயாரிக்கப்பட்டது ஆகும். அவர்கள் யாரும்ஊரில் வசிக்கவில்லை. 1986 இல் இருந்து நான் தலைவராக இருந்தேன் என்றாலும் அதில் இருந்து யார் யார் வாடகைதாரர்களாக இருந்ததை பற்றிய விவரத்திற்கான ஆவணங்கள் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் அவை தான் திருடப்பட்டுவிட்டது. வா.சா.ஆ.34 உண்மையான வாடகை பத்திரம் இல்லை என்றால் சரிதான். மாசிமச உற்சவம் செய்து வருவதற்கு வரவு செலவு கணக்கு வைத்திருக்றேன். அதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன்.

24. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மாசிமக உற்சவ பத்திரிக்கை பொய்யானவை 2015 இல் புவனகிரி தாலுக்காவாக மாறியது ஆனால் சிதம்பரம் தாலுக்கா என்று பத்திரிக்கைகளில் எழுதப்பட்டிருக்கிறது, அந்த பத்திரிக்கைகள் பொய்யாக தயாரிக்கப்பட்டவை பத்திரிக்கைகள் ஸ்ரீமுஷ்ணத்தில் இருந்து பட்டாச்சாரியர்கள் நேரடியாக வந்து பத்திரிக்கையுடன் கோர கிழங்கு பிரசாதம் கொடுப்பார்கள் அவ்வாறு தான் எனது தகப்பனார் காலத்திலும் என் காலத்திலும் நேரடியாக வந்து பத்திரிக்கை கொடுப்பார்கள். அவர்கள் கொடுத்த பத்திரிக்கை நான் வைத்திருக்கிறேனா என்றால் அவைகள் திருடப்பட்டுவிட்டன. வா.சா.ஆ.40, 2002 இல் இருந்து வாதி தரப்பில் வரவு செலவு தாக்கல் செய்திருக்கிறார்கள் அவை சரியானதா என்றால் தவறானது, சாட்சி மூர்த்தியின் கையெழுத்து ஆகும்.

25. வா.சா.ஆ.41, CMA.17/2004 வழக்கு என்னவாயிற்று என்றால் நடத்தாமல் தள்ளுபடி ஆகிவிட்டது. OS.31/2004 வழக்கு தாக்கல் செய்திருந்தேன். அதில் உறுத்துகட்டளை மொத்த சொத்திற்கும் கேட்டேன் 167 E க்கு மட்டும் எனக்கு உறுத்துக்கட்டளை கொடுத்திருந்தார்கள். அதற்கான ஆதார ஆவணம் இருக்கிறது அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. 167E க்கு உறுத்துக்கட்டளை உத்தரவு எனக்கு சாதகமாக வழங்கபட்டதா வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல IA.109/2004 ன் படி உத்தரவு வழங்கப்பட்டது. முழு சொத்திற்காகவும் உறுத்துக்கட்டளை கேட்டதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. OS. 175/2007 மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் குடிநீர் இணைப்பை 167 b இல் இருந்து 167 E க்கு மாற்றவேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்து அதை வாபஸ் செய்துவிட்டு Writ.47/1993 மனு தாக்கல் செய்தேன், Writ மனுவை

நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன். எனது பெயரில் வரி விதிப்பு இருந்ததை மாற்ற கூடாது என்று OS.175/2007 தாக்கல் செய்திருந்தேன். OS.175/2007 வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.43, 38/2003 எனது சங்கம் சங்கபதிவேட்டில் இருந்து நீக்கப்பட்டதாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் மேற்சொன்ன திருட பட்ட ஆவணங்களை கொண்டு வந்து கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். எழுத்துபூர்வமான உத்தரவு இல்லை.

**சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-S.Padmavathi,
Principal District Munsif
Chidambaram.